T

# முழு ஆண்டு பொதுத் தேர்வு - 2025

## ஒன்பதாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி தமிழ் மதிப்பெண்கள்: 100

பகுதி -1

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 15×1=15

1) தமிழ்விடு தூது ________ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது
   அ) தொடர்நிலைச்செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

2) 'மிசை' என்பதன் எதிர்ச்சொல் என்ன?
   அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

3) முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
   அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்
   ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான
   இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்
   ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்

4) தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வு தேர்வு எது?
   அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
   இ) தேசியத் திறனறி கல்வி உதவித்தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

5) பூவாது காய்க்கும், மலர்க்கை அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
   அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப்பெயரெச்சம், உருவகம்
   ஆ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

6) "பொதுவர்கள் பொலிஉறப்போர் அடித்திடும்" நிலப்பகுதி ________
   அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை

7) 'ஞானம்' என்பதன் பொருள் யாது?
   அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

8) தற்போது ஒரே நேரத்தில் ________ இலட்சம் பயனர்கள் இணையவழிச் சேவையைப் பயன்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.
   அ) 10 இலட்சம் ஆ) 5 இலட்சம் இ) 3 இலட்சம் ஈ) 20 இலட்சம்

9) நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு - இத்தொடர்களில் குறிப்பிடப்பட்டுள்ள நாடுகள் முறையே
   அ) பாண்டியநாடு, சேரநாடு ஆ) சோழநாடு, சேரநாடு
   இ) சேரநாடு, சோழ நாடு ஈ) சோழ நாடு, பாண்டிய நாடு

10) இமயத்துக் கோடு உயர்ந்தன்ன - இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?
   அ) கொம்பு ஆ) மலையுச்சி இ) சங்கு ஈ) மேடு

11) 'தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' என்ற பட்டத்தைப் பெற்றவர் ________
   அ) தந்தை பெரியார் ஆ) சாக்ரடீஸ் இ) அரிஸ்டாட்டில் ஈ) பிளேட்டோ

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

வானூர்தி செலுத்தல் வைய
    மாக்கடல் முழுது மளத்தல்
ஆனஎச் செயலும் ஆண்பெண்
    அனைவர்க்கும் பொதுவே!

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



12) இப்பாடல் அடிகள் இடம்பெற்றுள்ள கவிதை ______

அ) சிறுபஞ்சமூலம் ஆ) சிலப்பதிகாரம் இ) குடும்ப விளக்கு ஈ) பட்டமரம்

13) இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) வைரமுத்து ஈ) வண்ணதாசன்

14) இப்பாடலில் 'வையம்' என்று பொருள் தரும் சொல்லைக் கண்டறிக

அ) கடல் ஆ) அணு இ) வானம் ஈ) உலகம்

15) பிரித்து எழுதுக. முழுதுமளத்தல்

அ) முழுதும்+அளத்தல் ஆ) முழு+அளத்தல்

இ) முழுது+அளத்தல் ஈ) முழுது+மளத்தல்

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:- **4×2=8**

(வினா எண்.21க்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)

16) விடைகளுக்கேற்ற வினா அமைக்க

அ) மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் 'இளைய கலாம்' என்று அன்புடன் அழைக்கப்படுகிறார்.

ஆ) உரைநடையில் கவிதை எழுதுவதைப் பாரதி வசன கவிதைகளின் வழியாகத் தொடங்கினார்.

17) நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

18) கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக?

19) "பழமணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக

20) நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன் - இத்தொடரில் அமைந்துள்ள உருவகத்தைக் கண்டறிக.

21) 'தலை' என முடியும் குறட்பாவினை எழுதுக.

### பிரிவு - ஆ

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:- **5×2=10**

22) வல்லினம் மிகா இடங்கள் இரண்டினைக் கூறி சான்று தருக.

23) வினைப்பகுதிகளை எச்சங்களாகவும் முற்றாகவும் மாற்றுக

பூங்கொடி நேற்று பள்ளிக்குச் ______ (செல்) தன் தோழிகளைக் ______ (காண்) மகிழ்ச்சியுடன் ______ (உரை) பின்னர் வங்கிக்குப் ______ (போ)

24) மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க

அ) உடும்புப் பிடி ஆ) கிணற்றுத்தவளை

25) பகுபத உறுப்பிலக்கணம் தருக: நெறிப்படுத்தினர்

26) கலைச்சொற்கள் தருக. அ) Hero stone ஆ) Cultural Academy

27) பழமொழிகளை நிறைவு செய்க.

அ) கல்லாடம் படித்தவரோடு ______

ஆ) சித்திரமும் கைப்பழக்கம் ______

28) பிழைகளை நீக்கி எழுதுக.

அ) மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணைபுரிகின்றன

ஆ) மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தாள்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **2×3=6**

29) மக்களின் வாழ்கைத்தரம் உயர்வதில் செயற்கைக்கோளின் பங்கு யாது?

30) குறிப்பு வரைக: 'டோக்கியோ கேடட்ஸ்'

31) உரைப்பத்தியைப் படித்துப் வினாக்களுக்கு விடை தருக.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளிச் சந்தை 18 ஏக்கர் பரப்பில் எட்டாயிரம் கடைகளுடன் இன்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடுகிறது. பல ஊர்களைச் சேர்ந்த மக்கள் தக்காளி முதல் தங்கம் வரை வாங்குவதற்குக் கூடுகிறார்கள். 125 ஆண்டுகள் வயதான அச்சந்தையில் நான்கு தலைமுறைகளாக நட்பு நிலவுகிறது. கலப்படமில்லாத பொருள்களை வருவாய் நோக்கின்றி அச்சந்தை இன்றும் விற்பனை செய்து வருவதே அதன் சிறப்பாகும்.

வினாக்கள்:

அ) போச்சம்பள்ளிச்சந்தை எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

ஆ) பல ஊர்களைச் சேர்ந்த மக்கள் என்னென்ன பொருட்களை வாங்குவதற்காகக் கூடுகிறார்கள்?

இ) போச்சம்பள்ளிச்சந்தையின் சிறப்பு யாது?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
(வினா எண். 34க்குக் கட்டாயமாக விடையளிக்கவும்) **2×3=6**

32) ஓ.என். சமகாலத் தோழர்களே கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?

33) பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

34) அடிபிறழாமல் எழுதுக.

அ) நீர்இன்று அமையா .......... எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் (அல்லது)

ஆ) ஆக்குவது ...... எனத் தொடங்கும் யசோதர காவியப் பாடல்

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **2×3=6**

35) கைபிடி, கைப்பிடி - சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

36) உருவக அணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

37) ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- **5×5=25**

38) அ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க

(அல்லது)

ஆ) வாழ்க்கைப் போரில் வெற்றி பெறுவதற்கான வழிகளைக் கமுகுமரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

39) அ) உங்கள் பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக. (அல்லது)

ஆ) வார இதழ் ஒன்றில் படித்த கவிதையை/கதையைப் பாராட்டி அந்த இதழாசிரியருக்குக் கடிதம் எழுதுக.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41) நயம் பாராட்டுக.

கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்
எல்லை விரிந்த சமவெளி - எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.
ஏறாத மேடுகள் ஏறி வந்தேன்
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன் - கவிமணி

(அல்லது)

42) அ) மொழிபெயர்க்க

Akbar said, "How many crows are there in this city?"
Without even a moment's thought, Birbal replied "there are fifty thousand five hundred and eighty nine crows, my lord"
"How can you be so sure?" asked Akbar.
Birbal said, "Make your men count, My lord. If you find more crows it means somehow come to visit their relatives here. If you findless number of crows it means some have gone to visit their relatives elsewhere."
Akbar was pleased very much by Birbal's wit. (அல்லது)

ஆ) உங்கள் பெற்றோர் மகிழுமாறு நீங்கள் செய்ய வேண்டிய ஐந்து பணிகளை எழுதுக.

## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்:- **3×8=24**

43) அ) நீரின்று அமையாது உலகு - எனும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (அல்லது)

ஆ) மொழியிலும், இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக

44) அ) நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை? (அல்லது)

ஆ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க

45) அ) நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக. (அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு ஓர் இயற்கைக் காட்சியை விரித்தெழுதுக
(பூஞ்சோலை - சிரிக்கும் மரங்கள் - பசுமையான புல்வெளி - கூவும் குயில் - வீசும் தென்றல் - விளையாடும் குழந்தைகள் - அழகிய காட்சிகள்)

********

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com